**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | Judicial Magistrate, Thuraiyur. |
| Case No. | : | CC.17 of 2021 |
| Prosecution Witness | : | PW1 |

11.08.2025.

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : சரவணன் | Calling | : | வேலை செய்யவில்லை |
| Father Name | : பட்டன் | Religion | : | |
| Village | : தேவானூர் புதூர் | Age | : | 47 |
| Taluk | : முசிறி | | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

1 வது எதிரி ஆஜரில்லை. 2 வது எதிரி ஆஜர். மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது தேவ◌ானூர் புதூரில் குடியிருந்து வருகிறேன். 1 வது எதிரியையும், ஆஜர் எதிரியையும் தெரியும். எனது ஊரை சேர்ந்தவர்கள். 25.06.2020 அன்று தேவானூர் வி.ஏ.ஓ அலுவலகத்தில் நானும், எனது தம்பி செந்தில்குமாரும் இரவு 08.00 மணிக்கு உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அப்போது எதிரி அஜயும் அவருடன் விக்னேஷ் என்பவரும் அங்கு வந்தார். எனது தம்பிக்கு அஜையை தெரியாது. அப்போது எனது தம்பி என்னிடம் சங்கன் மகன் அஜையா என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான் ஆமாம் என்று சொன்னேன். அதற்கு அஜய் எப்படி என்னை சங்கன் மகன் என்று சொல்லலாம் என்று அஜய் எனது தம்பி செந்தில்குமாரை கோபபட்டு பேசினார். இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. அஜய் ஆஜர் எதிரிக்கு போன் செய்தார். அஜயின் அம்மா பார்வதி கிராம நிர்வாக அலுவலகத்திற்கு வந்தார். அவர்களுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு சென்றுவிட்டார்கள். 27.06.2020 அன்று மதியம் 03.00 மணிக்கு எதிரி அஜய் எனக்கு போன் செய்தார். நீ எங்கடா இருக்கிற என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். நான் நெசவாளர் காலனியில் உள்ள எனது வீட்டின் பின்புறம் ஆடு மேய்த்துக் கொண்டிருக்கிறேன் என்று சொன்னேன். அங்கேயே இருடா என்று சொல்லி தவறான வார்த்தைகளால் பேசினார். ஆஜர் எதிரியும், அஜயும் ஆடு மேய்த்துக்கொண்டிருந்த இடத்திற்கு வந்தார்கள். நான் எனது தம்பிக்கு போன் செய்து அஜய் வருகிறேன் என்று சொன்னான் என்றும் நீ புறப்பட்டு வா என்று கூறினேன். சிறிது நேரத்தில் எதிரியும், அஜயும் வந்தார்கள். வண்டியை நிப்பாட்டிவிட்டு வண்டியில் இருந்த சாட்சி தனது கையை காட்டி அவ்வளவு

பெரிய குச்சியை எடுத்து அஜய் என்னை அடிக்க வந்தார். நான் எனது இடது கையால் தேக்கினேன். அஜய் எனது இடது கை மணிக்கட்டில் குச்சியால் அடித்துவிட்டார். அதில் எனது இடது கை மணிக்கட்டு உடைந்துவிட்டது. இடது கை மோதிர விரலில் காயம் ஏற்பட்டது. மோதிரத்தை காணவில்லை. அஜய் என்னை கீழே தள்ளி உதைத்தார். எனது தம்பி வருவதை பார்த்து எதிரிகள் இருவரும் ஓடிவிட்டார்கள். மாரிமுத்து என்பவரும் எனது தம்பியும் என்னை துறையூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச்சென்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கைரேகை என்னுடையது தான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு எழுதப்படிக்க தெரியும். கையெழுத்து போடுவேன். கைரேகை அரசு மருத்துவமனையில் வைத்து செய்தேன். படித்து பார்த்து கைரேகை செய்யவில்லை. புகாரில் உள்ள சங்கதிகளை போலீசார் எனக்கு படித்து காண்பிக்கவில்லை. 25ம் தேதி நானும், எனது தம்பியும் கிராம நிர்வாக அலுவலத்தில் பேசிக்கொண்டிருந்ததாக போலீசார் விசாரணையில் கூறினேன். மேற்படி தேதியில் நான் அஜயின் அப்பாவிற்கு போன் செய்து அஜயின் அம்மாவின் நடவடிக்கை பற்றி தவறாக கூறினேன் என்றால் சரியல்ல. ஆடுமேய்த்துக்கொண்டிருந்தபோது, முதலில் அஜய் போன் செய்த விவரத்தை போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். அஜய் ஆடு மேய்க்கும் இடத்திற்கு வருவதாக கூறியதை எனது தம்பியிடம் போன் செய்து கூறியதாக போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். 27.06.2020ம் தேதி நான் அஜய்க்கு போன் செய்து அவருடைய அம்மாவை பற்றி தரக்குறைவாக பேசினேன் என்றால் சரியல்ல. என்னை அடித்த பிறகு எனது தம்பி வந்தார். பெரிய குச்சியால் இரண்டு தடவை எதிரி அடித்தார். மருத்துவமனையில் எக்ஸ்ரே, ஸ்கேன் எடுத்தார்கள். நான் எப்போதும் மதுபோதையில் இருப்பேன் என்றும், நான் அஜயின் அம்மாவை தரக்குறைவாக பேசியதால் என் மீது புகார் கொடுத்துவிடுவார் என்று எதிரிகள் மீது பொய்யாக

**புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரிகளால் எனக்கு காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/-அ.நர்மதாராணி,

நீதித்துறை நடுவர், துறையூர்